# ஸ்ரீ லங்கா

ஆரோக்கியம் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய லான்செட் கவுண்டவுன் தரவுத் தாள் 2024

LANCET COUNTDOWN: TRACKING PROGRESS ON HEALTH AND CLIMATE CHANGE

## இலங்கையில் சுகாதாரமும் காலநிலை மாற்றமும்

ஆரோக்கியம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான லான்செட் கவுண்டவுன் (The Lancet Countdown on Health and Climate Change) ஆண்டுதோறும் 50 க்கு மேற்பட்ட மதிப்பாய்வு செய்யப்பட்ட குறிகாட்டிகள் மூலம் ஆரோக்கியம் மற்றும் காலநிலை மாற்றத்தின் முன்னேற்றம் தொடர்பான இணைப்புகளை மதிப்பீடு செய்கிறது. 2016 முதல், இந்தக் குறிகாட்டிகள் காலநிலை மாற்றம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக முறைமையான, நம்பகரமான உலகளாவிய மற்றும் பிராந்திய மதிப்பீடுகளை வழங்கி வருகின்றன. இந்த ஆண்டிற்கான அறிக்கையில் உள்ள தரவுகள், வேகமாக மாறும் காலநிலை காரணமாக, உலகம் முழுவதும் உள்ள மக்கள் தங்கள் நலன், ஆரோக்கியம் மற்றும் உயிர் வாழ்விற்கு முன்பொருபோதும் இல்லாத அளவுக்கு கடும் அச்சுறுத்தல்களை சந்தித்து வருகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. இந்த ஆவணம் இலங்கைக்கான 2024 லான்செட் கவுண்டவுன் அறிக்கையின் முக்கிய விபரங்களை சுருக்கமாக விளக்குகிறது, அவை:

மிக அதிகமாகவும் தீவிரமாகவும் ஏற்படும் வறட்சி மற்றும் காட்டுத்தீகள் பயிர் உற்பத்தியை பாதிக்கின்றன, உணவுப் பாதுகாப்பு, நீர்பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை பாதிக்கின்றன, மேலும் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தொற்றுநோய்களின் பரவல் அபாயத்தை அதிகரிக்கின்றன.

ஏந்திகள் மூலம் பரவும் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் பரவத்தக்க வகையில் காலநிலைகள் மேலும் ஏற்றதாக மாறிவருகின்றன.

பல பில்லியன் டாலர் பெறுமதியான எரிபொருட்களுக்கான மானியங்கள் ஆரோக்கியத்தைப் பேணும் சேவைகளுக்கு கிடைக்கக்கூடிய நிதிகளை கட்டுப்படுத்துகின்றன மற்றும் தூய்மையான, கரியமிலவாயு அற்ற ஆற்றலுக்கான மாற்றத்தைத் தடை செய்கின்றன.

இந்தத் தரவுகள், ஆரோக்கியத்திற்கு தீங்குசெய்யும் நவீன எரிபொருள்களில் இருந்து நிதிகளை மாற்றி, உள்ளூர் மருத்துவ அமைப்புகளை பலப்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு செயல்படுவதற்கும், சுகாதார நன்மைகளை ஒரே நேரத்தில் வழங்கும் வலையமைப்புகள் மூலம் பசுமையில்ல வாயுக்களை (GHG) குறைக்க முயற்சிகளை மேற்கொள்வதற்கும் வலியுறுத்துகின்றன.

## வெப்பமும் ஆரோக்கியமும்

உயர்ந்த வெப்பநிலைக்கு முகம்கொடுத்தல் மக்களின் வாழ்க்கை, ஆரோக்கியம் மற்றும் நலனை அச்சுறுத்துகிறது, இதனால் மரணம், வெப்பத்துடன் தொடர்புடைய நோய்கள் மற்றும் வெப்ப அலையின் போது சுகாதார சேவைகளின் தேவை அதிகரிக்கின்றன. முதியோர், சமூக-பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட சமுதாயங்கள், மிகவும் இளவயது குழந்தைகள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குறிப்பாக ஏற்கனவே ஆரோக்கிய பிரச்சினைகள் உள்ளவர்கள் ஆபத்தில் உள்ளனர்.

2014-2023 காலகட்டத்தில், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆண்டுக்கு அனுபவித்த வெப்ப அலையின் நாட்களின் மொத்த எண்ணிக்கை 1986-2005 காலகட்டத்தில் உள்ளதை விட 356% அதிகமாக இருந்தது. 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதே காலகட்டத்தில் வெப்ப அலையின் நாட்களில் 920% அதிகரிப்பை அனுபவித்தனர் (குறிகாட்டி 1.1.1).

2014-2023 காலகட்டத்தில், ஒவ்வொரு ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைக்கும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஆண்டுக்கு சராசரியாக முறையே 3.8 மற்றும் 4.3 வெப்ப அலையின் நாட்களை முகம்கொடுக்கவேண்டி ஏற்பட்டது. இது 1986-2005 க்கு ஒப்பிடும்போது 214% மற்றும் 286.5% அதிகரிப்பை குறிக்கிறது (குறிகாட்டி 1.1.1).

### வெப்பத்தின் பொருளாதார பாதிப்பு

வெப்பத்திற்கு முகம்கொடுத்தல் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை குறைக்கிறது, இது வாழ்வாதாரத்தையும் சமூக ஆரோக்கியத்திற்கான தீர்மானங்களையும் பாதிக்கிறது.

**US$1.65 பில்லியன்** 2023 ஆம் ஆண்டு, வெப்பத்தால் ஏற்பட்ட உழைப்புத் திறன் குறைவின் காரணமாக US$1.65 பில்லியன் வருமான இழப்பு ஏற்பட்டதாகக் கணிக்கப்பட்டது (குறிகாட்டி 4.1.3).

**1.8 பில்லியன்** 2023 ஆம் ஆண்டு, வெப்பம் வெளிப்பாட்டினால் 1.8 பில்லியன் உழைப்பு மணிநேரங்கள் இழக்கப்பட்டன, இது 1990-1999 காலக்கட்டத்துடன் ஒப்பிடும்போது 11% அதிகரிப்பாக இருந்தது (குறிகாட்டி 1.1.3).

விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டனர், 2023 ஆம் ஆண்டு 63% உழைப்பு மணிநேர இழப்பும், 36% வருமான இழப்பும் அனுபவித்தனர் (குறிகாட்டிகள் 1.1.4 மற்றும் 4.1.3).

2014-2023 காலகட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஒருவர் இலகுரக வெளிப்புற செயல்பாடுகள் (உதாரணமாக நடப்பது போன்றவை) செய்யும் போது மொத்தம் 3024 மணிநேரங்கள் மிதமான அல்லது அதற்கு மேற்பட்ட வெப்ப அழுத்தத்திற்கு வெளிப்பட்டு இருந்தனர் (குறிகாட்டி 1.1.2).

## உணவு பழக்கம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்

பெரும்பாலும் முழுமையான தாவர உணவுகளை கலாச்சார மற்றும் மத நம்பிக்கைகளுக்கேற்ப பின்பற்றினாலும், இந்த உணவுகளின் கிடைக்கும் தன்மை, மொத்த செலவுத்திறன் மற்றும் உணவுப் பல்வகைமை ஆகியவற்றில் இடைவெளிகள் உள்ளன. இதனால் சமநிலை இல்லாத உணவு பழக்கங்கள் மற்றும் தடுக்கக்கூடிய ஆரோக்கிய சிக்கல்கள் உருவாகின்றன.

2021 ஆம் ஆண்டு, போதுமான அளவு சத்துள்ள தாவர உணவுகளை (பழங்கள், காய்கறிகள், பருப்புகள், முழு தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் விதைகள் உட்பட) சாப்பிடாததன் காரணமாக 20,600 மரணங்கள் நடந்துள்ளன. இது உணவுடன் தொடர்புடைய மரணங்களில் 67% ஆகும் (குறிகாட்டி 3.3.2).

காலநிலை மாற்றம், வேளாண்மை மற்றும் முக்கிய பயிர்களின் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்துவதால், உணவு குறித்த சவால்களை மோசமாக்குகிறது. பல்வகை, சத்துள்ள தாவர உணவுகளை ஊக்குவிப்பது, உணவால் ஏற்படும் மரணங்களை குறைக்கவும், உணவு அமைப்பின் காலநிலை தாக்கங்களை எதிர்கொள்ளும் செயல்திறனை மேம்படுத்தி, கலாச்சார விழுமியங்களுடன் ஒத்துப்போய், வேளாண் பசுமையில்ல வாயுக்களின் வெளியீடுகளை (GHG) குறைத்து, பொதுசுகாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் துணை புரிகிறது.

LANCET COUNTDOWN: TRACKING PROGRESS ON HEALTH AND CLIMATE CHANGE

## தொற்று நோய்களின் பாதிப்பு

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு மாற்றங்கள், ஏந்திகள் மூலம், உணவு மூலம் மற்றும் நீர் மூலம் பரவும் தொற்று நோய்கள் பரவும் ஏதுநிலையை உருவாக்குகின்றன.

1951-1960 காலகட்டத்தில் ஏடிஸ் எஜிப்டி நுளம்புகளின் மூலம் டெங்கு பரவும் காலநிலைச் சாத்தியக்கூறு (அடிப்படை இனப்பெருக்க எண்ணிக்கை, R0) 4.29 இருந்து 2014-2023 காலகட்டத்தில் 4.74 ஆக 10.6% அதிகரித்துள்ளது (குறிகாட்டி 1.3.1).

2014-2023 காலகட்டத்தில், இலங்கையின் கீழ்நிலப் பகுதிகளில் (<1500 மீட்டர்) மலேரியா பரவுவதற்கு ஏற்ற சூழல் ஆண்டு தோறும் சராசரியாக 7.3 மாதங்கள் காணப்பட்டது (குறிகாட்டி 1.3.2).

292%

2014 முதல் 2023 வரை, வருடத்தின் எந்த நேரத்திலும் விப்றியோ நோய்க்கிருமிகள் பரவுவதற்கு ஏற்ற நிலையில் இருந்த கடற்கரைப் பகுதியின் நீளம், 2000-2004 காலகட்டத்தை விட 292% அதிகமாக இருந்தது. கடந்த 5 ஆண்டுகளில், விப்றியோ பரவுவதற்கு ஏற்ற கடற்கரையில் 100 கிமீ அகலத்தில் வசித்த சராசரி ஆண்டு மக்கள் தொகை 3.3 மில்லியனாக உயர்ந்தது. இது 1990-1999 காலத்தின் சராசரி எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 374% அதிகரிப்பைக் குறிக்கிறது (குறிகாட்டி 1.3.3).

## ஆற்றல் மாற்றம் மற்றும் ஆரோக்கிய இணை நன்மைகள்

புதைபடிவ எரிபொருட்களையும் உயிரிவாயு எரிபொருட்களையும் தொடர்ந்து பயன்படுத்துவது உயர்ந்த அளவிலான காற்று மாசுபடுதலை ஏற்படுத்துகிறது. இது சுவாச மற்றும் இருதய நோய்கள், சுவாசப் புற்றுநோய், சலரோக நோய், நரம்பியல் கோளாறுகள், கற்ப கால பாதிப்புகள் ஆகியவற்றுக்கான ஆபத்தை அதிகரிக்கிறது. மேலும், நோய்களின் தாக்கமும், மரண எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஆற்றல் அமைப்புகளை புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களுக்குத் மாற்றுவது மனித ஆரோக்கியத்திற்கு நன்மை தருவதுடன் காற்று மாசுபடுதலைக் குறைக்கும்; கார்பன் வாயுக்களின் வெளியீடுகளை தடுக்கும்; மேலும், உலகளாவிய, மலிவான மற்றும் சுத்தமான ஆற்றலின் நோக்கை அடைவதற்கும் துணை செய்கிறது.

$2.1 bn

2022 ஆம் ஆண்டு, இலங்கையின் நிகர-எதிர்மறை கார்பன் வருவாய், தகுந்த விலை நிர்ணயத்தை விட அடர்ந்த எரிபொருட்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நாடு, நிகரமாக US$2.1 பில்லியன் அடர்ந்த எரிபொருட்களுக்கு மானியமாக ஒதுக்கியது (குறிகாட்டி 4.3.3).

அடர்ந்த எரிபொருட்களுக்கான மானிய நிதிகளை குறைவான கார்பன் ஆற்றலின் விரிவாக்கத்திற்கும் அதனுடன் கூடிய சுகாதார மேம்பாட்டுக்கான முயற்சிகளுக்கும் திருப்பிச் செலுத்துவதால் உள்ளூர் மக்களுக்கு நிகர நன்மைகள் கிடைக்கும் மற்றும் சமநிலை மாற்றத்தை ஆதரிக்கும்.

### காற்று மாசுறுதலின் சுகாதார தாக்கங்கள்

**7700 இறப்புகள்**

2021 ஆம் ஆண்டு, மனித செயல் காரணமான காற்று மாசடைதல் ($PM_{2.5}$) 7,700 மரணங்களுக்கு காரணமாக இருந்தன. இதில், அடர்ந்த எரிபொருட்கள் (நிலக்கரி மற்றும் திரவ எரிவாயு) 46% மரணங்களுக்கு காரணமாக இருந்தன (குறிகாட்டி 3.2.1).

2020 ஆம் ஆண்டு, வீடுகளில் திட எரிபொருட்களை எரிப்பதால் ஏற்பட்ட உள் மாசு ($PM_{2.5}$) 100,000 மக்களில் 87 மரணங்களுக்கு காரணமானது (குறிகாட்டி 3.2.2).

**US$2.45 பில்லியன்**

2021 ஆம் ஆண்டு, மனித செயல் காரணமான காற்று மாசடைவதால் ஏற்பட்ட முன்கூட்டிய மரணங்களின் பண மதிப்பு US$2.45 பில்லியன் ஆக இருந்தது (குறிகாட்டி 4.1.4).

2021 ஆம் ஆண்டில், நிலக்கரி பயன்பாடு 2000 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட பயன்படுத்தப்படாத நிலையில் இருந்து 34% மின்சாரம் மற்றும் மொத்த எரிசக்தி விநியோகத்தில் 16% வழங்குவதற்கு அதிகரித்தது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ளிட்ட குறைந்த கார்பன் மூலங்கள் சிறிது உயர் மட்டத்தில் இருந்தாலும், மின்சார விநியோகம் 49%, மொத்த ஆற்றல் வழங்கல் 6% ஆக இருந்தது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் தனிநிலை பயன்பாடு மின்சாரத்தில் 5%, மொத்த ஆற்றலில் 0.6% ஆகக் குறைந்த அளவிலேயே இருந்து வந்தது (குறிகாட்டி 3.1.1).

## அதிகரித்த வானிலை மாற்றங்கள் மற்றும் சுகாதாரம்

அதிகரித்துவரும் அடிக்கடி நிகழும் மற்றும் தீவிரமான காட்டுத்தீக்களும், வறட்சிகளும் பயிர் விளைச்சல்களை பாதிக்கின்றன. இது, உணவு மற்றும் நீர் பாதுகாப்பையும், சுகாதார முறைகளையும் பாதிக்கிறது. மேலும், ஊட்டச்சத்து குறைபாட்டிற்கும் தொற்று நோய்களின் பரவலுக்கான அபாயத்தை அதிகரிக்கிறது.

2019-2023 காலகட்டத்தில், இலங்கையில் மக்கள் காட்டுத்தீகளுக்கு உட்படும் வருடாந்திர சராசரி 50% ஆக்க் குறைந்தது, 2003-2007 காலகட்டத்துடன் ஒப்பிடுகையில். அதே காலத்தில், ஒவ்வொரு மனிதரும் சராசரியாக 12 நாட்கள் மிக அதிக அல்லது மிக தீவிர காட்டுத்தீ அபாயத்துக்கு உட்பட்டனர், இது 2003-2007 காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 46% குறைவாகும் (குறிகாட்டி 1.2.1).

2019-2023 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும், இலங்கையின் நிலப்பரப்பில் சராசரியாக 60% பகுதி குறைந்தது ஒரு மாதம் மிக தீவிர வறட்சியுக்குள்ளாகியது. மேலும், 33% பகுதி குறைந்தது மூன்று மாதங்கள் மற்றும் 27% பகுதி குறைந்தது ஆறு மாதங்கள் மிக தீவிர வறட்சியை அனுபவித்தது (குறிகாட்டி 1.2.2).

இந்த மொழிபெயர்ப்பு அதன் ஆங்கில பதிப்பின் அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பூகோள சுகாதார மையத்தினருக்கு அவர்களின் உள்ளீடு மற்றும் மொழிபெயர்ப்பிற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். தி லான்செட் இதழுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கில அறிக்கைக்கு ஆசிரியர் செயல்முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இது இந்த ஆவணத்திற்கான குறிப்பாக கருதப்பட வேண்டும்.

**FOR FURTHER INFORMATION, VISIT:**
**WWW.LANCETCOUNTDOWN.ORG**

Romanello M, Walawender M, Hsu SC et al. The 2024 report of the Lancet Countdown on health and climate change: Facing record-breaking threats from delayed action. Lancet 2024; published online October 2024. https://doi.org/10.1016/S0140-6736(24)01822-1